

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பாக, உலக தாய்ப்பால் வார விழா கோட்டார், அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியில் இன்று (18.08.2016) நடைபெற்றது. துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு. மதுசூதனன், கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.ஜெ. கிளாரன்ஸ் டேவி, மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி. பேச்சியம்மாள் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 546/2016 நாள்: 18.08.2016

## உலக தாய்ப்பால் வாரவிழா-2016

கன்னியாகுமரி மாவட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டத்தின் சார்பாக உலக தாய்ப்பால் வார விழா 2016, அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் முதல் வாரம் உலக தாய்ப்பால் வார விழா கொண்டாப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

இவ்வாண்டிற்கான தாய்ப்பால் விழா **"தாய்ப்பால் ஊட்டுதல் குழந்தையின் நீடித்த ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அடித்தளம்"** என்ற தலைப்பில் கொண்டாடப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

தாய்ப்பால் ஊட்டுதல் குழந்தையின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதுடன் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு வித்தாகவும் குழந்தை பிறந்த அரைமணி நேரத்திற்குள் சீம்பால் ஊட்டுவதும், முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டும் கொடுத்தாலும், இரண்டு வயது வரை இணை உணவுடன் இணைந்து தாய்ப்பால் வழங்குதலும் குழந்தைக்கு தேவையான கலோரி, புரதம், லாக்டோஸ், வைட்டமின், என்சைம்கள் மற்றும் போதுமான அனைத்து ஊட்டச்சத்துகளும் கிடைக்க வழிவகுக்கிறது என்றும் தெரிவித்தார். மேலும் குழந்தைக்கு தேவைப்படும் வேளையில் உடனடியாக எவ்வித தயாரிப்பும் தேவையின்றி எளிதில் மற்றும் சரியான தட்பவெப்ப நிலையில் கலப்படமின்றி கிடைக்க கூடியதாகவும் தெரிவித்தார். தாய் மற்றும் குழந்தைக்கு இடையே உணர்வு பூர்வமான பிணைப்பை மேம்படுத்தி அன்பு,அரவணைப்பு மற்றும் பாசம் அதிகரிக்க தாய்ப்பால் உதவுகிறது. தாய்ப்பால் ஊட்டப்படும் குழந்தைகள் ஆரோக்கியமாகவும் நுண்ணறிவு மிக்க குழந்தையாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே அனைத்து தாய்மார்களும் பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்குமாறு தெரிவித்தார்.

கல்வி அறிவில் சிறந்த மாவட்டமாக விளங்கும் நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட இன்னமும் சிசு மரணம், பேறு கால மரணங்கள் நிகழ்கின்றது. குறைந்த எடையுள்ள குழந்தைகள் பிறக்கும் விகிதமும் உள்ளது. இந்நிலை மாற தாய்மார்கள் கண்டிப்பாக குழந்தைக்கு தாய்ப்பால் வழங்கிட வேண்டும். இதன் மூலம் ஆரோக்கியமான குழந்தை பிறப்பும், சிசு மரணம்/ பேறு கால மரணமும் தவிர்க்கப்பட இயலும். கல்லூரி மாணாக்கர் மற்றும் பொதுமக்களுக்கு இது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் உலக அளவில் தாய்ப்பால் வாரம் கொண்டாடப்படுகிறது. தாய் சேய் நலம் காப்பதுடன் குடும்ப மற்றும் நாட்டின் பொருளாதார சமூக வளர்ச்சிக்கும் தாய்ப்பால் கொடுப்பது அடித்தளம் ஆகும். அதனால் குழந்தையின் நீடித்த ஆரோக்கியமான வளர்ச்சிக்கு தவறாமல் தாய்ப்பால் தருவது தாயின் கடமை ஆகும் என தெரிவித்தார்.

இதற்கு முன்பாக உலக தாய்ப்பால் வாரவிழா விழிப்புணர்வு கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு. மதுசூதனன், கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.ஜெ. கிளாரன்ஸ் டேவி, மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி. பேச்சியம்மாள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.